விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 166 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 20 சனிக்கிழமை (03.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=


## அரச புலனாய்வாளர்களால்

# கஜேந்திரகுமார் எம்.பி மீது

# மருதங்கேணியில் தாக்குதல்

### பிஸ்டலை லோட் பண்ணி குறிவைத்து மிரட்டல்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது புலனாய்வாளர் ஒருவர் தாக்குதல் நடத்தியுள்ளார். மேலும் பிஸ்டலை லோட் பண்ணி கஜேந்திரகுமார் எம்.பி மீது குறிவைத்து பொலிஸ் அதிகாரி ஒருவர் மிரட்டியுள்ளார்.

வடமராட்சி மருதங்கேணியில் இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது. (11ஆம் பக்கம் பார்க்க)



## நாட்டின் அதியுச்ச அடக்குமுறை

### கஜேந்திரகுமார் தாக்கப்பட்டமைக்கு சிறீதரன், சித்தார்த்தன் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கஜேந்திரகுமார் எம்.பி மீது அரச புலனாய்வாளர்கள் தாக்குதல் நடத்தியது இந்த நாட்டின் அதியுச்ச அடக்குமுறை என சிறீதரன் மற்றும் சித்தார்த்தன் எம்.பி கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் சிறீதரன் எம்.பி வெளியிட்ட கண்டன அறிக்கையில், 02



### எம்.பி மீது தாக்குதல்

## உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

### மனித உரிமைகள் ஆணைக்குழு

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தாக்கப்பட்டமை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 11

## வார இறுதி நாட்களிலும் எரிபொருளை விநியோகிக்குக

### எரிசக்தி அமைச்சர் கஞ்சன

(கொழும்பு)

அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும், போதியளவு கையிருப்பை வழங்குவதற்காக எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் எரிபொருளை விநியோகிக்குமாறு அமைச்சர் கஞ்சன விஜேசேகர அறிவுறுத்தியுள்ளார்.

இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் மற்றும் கனிய வள களஞ்சியமுனையம் ஆகியவற்றுக்கு 11

## இரண்டு மணித்தியாலங்களில் கடவுச்சீட்டை பெற்றுக் கொள்ளலாம்

### புதிய நடைமுறை அறிமுகம்

(கொழும்பு)

ஒருநாள்சேவையின் ஊடாக கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள இரண்டு மணித்தியாலங்கள் மாத்திரம் செலவிடும் முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள அந்த திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.(ம-7)

## ஜனாதிபதி ரணிலுக்கு எதிராக சர்வதேச சூழ்ச்சி நடக்கின்றது

### விழிப்பாக இருக்குமாறு குமார வெல்கம எச்சரிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக சர்வதேச ரீதியில் சூழ்ச்சி நடக்கின்றது. அது தொடர்பில் அரசு விழிப்பாகவே இருக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம ஊடகங்களிடம் தெரிவித்தார். 02

## 400 பொருட்களின் இறக்குமதிக்கு தளர்வு

### நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

எதிர்வரும் வாரத்தில் சுமார் 400 பொருட்களின் இறக்குமதித் தடைகள் தளர்த்தப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

300 முதல் 400க்கு இடைப்பட்ட பொருட்களுக்கு இறக்குமதி தடை 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### வாரத்தின் 7 நாட்களும்

# யாழ். - சென்னை விமான சேவையை முன்னெடுப்பது தொடர்பில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து வாரத்தின் ஏழு நாட்களும் யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகளை முன்னெடுப்பது தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகருடன் கலந்துரையாடப்பட்டதாக துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

தற்போது வாரத்தில் நான்கு நாட்கள் மாத்திரமே யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து இந்தியாவிற்கு சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஓடுதளத்தை விஸ்தரிப்பதற்கான கடன் வசதியை இந்தியாவிடம் இருந்து எதிர்பார்த்திருப்பதாகவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டார்.

இந்த கடனுதவி கிடைக்கப் பெற்றதும் விமான நிலையத்தின் விஸ்தரிப்புப் பணிகளை மேற்கொள்ள முடியுமென அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சுட்டிக்காட்டினார்.(ம-7)

### மாணவர்களை இலக்கு வைத்து

# வளர்ப்புப் புறாக்கள் மூலம் போதைப் பொருள் கடத்தல்

(அம்பாறை)

நீண்டகாலமாக பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருட்களை வளர்ப்புப் புறா மூலம் நுட்பமாக விநியோகித்து வந்த இரு சந்தேகநபர்களை சாய்ந்தமருது பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்தும் ஹெரோயின் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

அவை 3 கிராமும் 170 மில்லி கிராம் என பொதி செய்யப்பட்ட நிலையில் சந்தேக நபர்கள் வசம் இருந்து மீட்கப்பட்டுள்ளதுடன் அவை சிறு சிறு பக்கற்றுக்களில் பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்க பொதி செய்யப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# கொடிகாமம் உசனில் எறிகணைகள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உசன் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் வெடிக்காத நிலையில் இரண்டு எறிகணைகள் அடையாளம் காணப்பட்டு மீட்கப்பட்டுள்ளன.

அப்பகுதியில் உள்ள தென்னம் தோட்டம் ஒன்றிற்கு பசளை இடுவதற்காக குழி வெட்டிய போதே எறிகணைகள் அடையாளம் காணப்பட்டன.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் காணி உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் வெடி பொருட்களை மீட்டெடுத்தனர். (ம-7,30)

### கடந்த மே மாதம்

# 83,309 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை

(கொழும்பு)

கடந்த மே மாதம் இலங்கைக்கு 83,309 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இந்தாண்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை 100,000 க்கும் குறைவான வருகையை பதிவு செய்த முதல் மாதமாக மே மாதம் உள்ளது.

இருப்பினும், மே 2022 இல் பதிவுசெய்யப்பட்ட வருகை புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடுகையில் கடந்த மாதத்தின் எண்ணிக்கை 175.5 சதவீதம் அதிகமாகும்.

மே மாதத்தில் பருவ காலம் இல்லாததால் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை எப்போதும் குறைவாக இருக்கும் எனநிபுணர்கள்தெரிவித்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வழங்கல் தரவுகளின்படி, 2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 524,486 வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். (ம-7)

# புங்குடுதீவு பாலத்தில் உழவு இயந்திரம் விபத்து



(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு வாணர் பாலத்தின் ஊடாக பயணித்த உழவு இயந்திரம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த பாலத்தின் ஊடாக உழவு இயந்திரம் பயணித்த போது திடீரென சரிந்து வீழ்ந்து போனமையினாலேயே இவ்வாறு விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7.104)


பல ஆயிரம் கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள் கல்யாண மாலை

சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=



தொடர்புகளுக்கு :-

கல்யாண மாலை

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email : kalyanamalai.jaffna@gmail.com


# ஜனசக்தி ச.ச. நிலையத்தின் பவளவிழா நிகழ்வுகள்

ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு பவளவிழா நிகழ்வுகளில் மூன்றாம் நாள் விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 6 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

யாழ். மாவட்ட ரீதியான ஆண்களுக்கான 7 மைல் மரதன் ஓட்டம் காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து தலையணை அடிப் போர், உடற்பயிற்சி கண்காட்சி, விநோத உடை போட்டி உள்ளிட்ட பல விளையாட்டுக்கள் இடம் பெறவுள்ளது. அத்துடன் நாளை ஞாயிற்றுக்கிழமை 4 ஆம் நாள் விளையாட்டு போட்டிகளில் சிறப்பு நிகழ்வாக காலை 7 மணியளவில் மாவட்ட ரீதியான ஆண்களுக்கான 50 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-7)

## நாட்டின்...

பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் மருதங்கேணிப் பகுதியில், பொது மக்கள் முன்னிலையில் அரச புலனாய்வாளர்களால் ஆயுத முனையில் அச்சுறுத்தப்பட்டுள்ளமை இந்த நாட்டின் அதியுச்ச அடக்குமுறையையே காட்டிநிற்கிறது.

இந்த நாட்டின் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் மீது ஆயுதமுனையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ் அச்சுறுத்தலானது, சாதாரண தமிழ் மக்களின் இயல்புவாழ்வில் இராணுவம் மற்றும் அரச புலனாய்வாளர்களால் எத்தகைய அச்சுறுத்தல்கள் ஏற்படக் கூடும் என்பதை மிகத்தெளிவாகக் காட்டியிருக்கிறது.

மக்கள் பிரதிநிதியான பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குரிய சிறப்புரிமையை மீறி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது பகிரங்கமாக மேற்கொள்ளப்பட்டுள்ள இக் கொலைமுயற்சியில் ஈடுபட்டவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்துவதோடு, இச்சம்பவத்திற்கு எனது வன்மையான கண்டனங்களையும் பதிவு செய்கிறேன் என்றுள்ளது.

இது தொடர்பில் சித்தார்த்தன் எம்.பி வெளியிட்ட கண்டன அறிக்கையில்,

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது சிவில் உடையில் நின்ற பொலிஸார் தாக்குதல் நடத்தியதுடன், அநாகரிகமான வார்த்தைகளை பயன்படுத்தி திட்டியதுடன், துப்பாக்கியையும் நீட்டி மிரட்டல் விடுத்துள்ளனர்.

இலங்கை அரசியலமைப்பின் படி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குள்ள சிறப்புரிமைகளை மீறி,பொலிஸ் உத்தியோகத்தர்கள் செயற்பட்டுள்ளார்கள். இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் 70 வருடங்களுக்கு மேலாக நடத்தும் அரசியல் உரிமை போராட்டத்தின் நியாயத்தை மீளவும் ஒருமுறை உறுதி செய்துள்ளது இந்த சம்பவம்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கே பாதுகாப்பற்ற சூழ்நிலையும், மறுவளமாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு அரசியலமைப்பு வழங்கிய சிறப்புரிமைகளை மீறி சாதாரண பொலிஸ் உத்தியோகத்தர்களே கொலை மிரட்டல் விடுவதும், அவர்களை அதிகாரிகள் பாதுகாப்பதும் இலங்கைத்தீவின் இன ஒடுக்குமுறைக்கு மேலுமொரு தெளிவான சான்றாகும் என்றுள்ளது. (ம-7.33.104)

## ஜனாதிபதி...

அவர் மேலும் கூறுகையில்,

தற்போதைய சூழ்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே இந்த நாட்டை நிர்வகிக்க முடியும். எனவே, அவருக்கு ஆதரவு வழங்க வேண்டியது கட்டாயம். அதைவிட மாற்று வழி இல்லை.

அரச தலைவரும், அரசும் விழிப்பாகவே இருக்க வேண்டும். ஜனாதிபதிக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் விதத்தில் சர்வதேச சூழ்ச்சி நடக்கின்றது., இந்த சூழ்ச்சி ரணிலிடம் எடுபடாது என்ற நம்பிக்கை உள்ளது என தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார மீட்சி தொடர்ந்தும் சவாலானதாகவே உள்ளது

## ஐ. எம். எப் அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் பொருளாதார மீட்சி என்பது தொடர்ந்தும் சவாலான விடயமாகவே காணப்படுகின்றது என சர்வதேச நாணயநிதியத்தின் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கென்ஜிஒகமுரா தெரிவித்துள்ளார்.**

பொருளாதார நெருக்கடி ஊடாக இலங்கை பயணிக்கும் போது நெருக்கடியால் அளவுக்கதிகமான விதத்தில் பாதிக்கப்பட்டுள்ள ஏழைகள் மற்றும் நலிவடைந்தவர்களை பாதுகாக்க வேண்டியது அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

நுண் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துதல் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுத்தல் நிதி ஸ்திரத்தன்மையை பாதுகாத்தல், ஆட்சிமுறையை வலுப்படுத்துதல், நலிவடைந்தவர்களை பாதுகாத்தல் ஆகியனவே பொருளாதார சீர்திருத்தத்தின் நோக்கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கான தற்காலிக அறிகுறிகளை காணப்பிக்கின்றது என தெரிவித்துள்ள அவர் முக்கிய கொள்கைகளை நடைமுறைப்படுத்தியதன் காரணமாகவே இந்த நிலையேற்



பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார். (நி)

# செயற்கை சிறுநீரகங்களுக்கு பற்றாக்குறை

(கொழும்பு)

சிறுநீரக நோயாளர்களுக்கு டயாலிசிஸ் செய்ய பயன்படுத்தப்படும் செயற்கை சிறுநீரகங்கள் மற்றும் இரத்த நாளங்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதனால் சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதில். சிக்கல்கள் ஏற்படுவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், சிறுநீரகம் மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய மையத்தில் (சிறுநீரக மருத்துவமனை) நோயாளிகளுக்குப் பயன்படுத்தப்படும் செயற்கை சிறுநீரகங்கள் மற்றும் இரத்த நாளங்கள் இன்னும் ஒரு வாரத்திற்கு மட்டுமே போதுமானது என்று கூறப்படுகிறது.

தற்போது இந்நாட்டில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் மாதாந்தம் நூற்றுக்கும் நூற்று ஐம்பதுக்கும் இடைப்பட்ட சிறுநீரக நோயாளர்கள் பதிவாகுவதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். (நி)

# பௌத்த மதத்தை விமர்சிக்கும் உரிமை எவருக்கும் கிடையாது-மைத்திரி

(கொழும்பு)

பௌத்த மதத்தை விமர்சிக்கும் உரிமை இங்கு எவருக்கும் கிடையாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மொழிகளும் மதங்களும் வேறுபட்டாலும் ஒவ்வொரு மதங்களையும் மதிக்க மனிதர்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

இதன் ஊடாக அரசியல் செய்ய பலரும் முயற்சிக்கிறார்கள். கடந்த காலங்களில் எல்லாம் இது போன்ற பல வரலாறுகள் காணப்படுகின்றன.

என்னைப் பொறுத்தவரை மொழி அல்லது மத அடையாளம் கொண்ட அரசியற் கட்சிகளை பதிவு செய்வதை தடை செய்யும் வகையில் அரசமைப்பில் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும்.

தேர்தல் ஆணைக்குழுவும் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அப்போது மட்டுமே இவ்வாறான வெறுப்புப் பிரசாரங்களின் ஊடாக அரசியல் செய்யும் கலாசாரத்தை நாட்டிலிருந்து இல்லாது செய்ய முடியும்.

வெறுப்புப் பிரசாரங்களை செய்யும் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து அடிப்படைவாதிகளால் நிதி அனுப்பப்படுகிறது.

இதனைக் கண்டறிந்து முதலில் அரசாங்கம் நிறுத்த வேண்டும். புலனாய்வுப் பிரிவினர் இதனைக் கண்டறிய வேண்டும்.

நல்லிணக்கம், ஜனநாயகம், மனிதாபிமானத்தை உறுதிப்படுத்தினாலேயே ஒரு நாட்டை முன்னேற்ற முடியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் குறிப்பிட்டார். (நி)

## கையிருப்பை பேணாவிட்டால்

# எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அனுமதிப்பத்திரம் ரத்து-காஞ்சன எச்சரிக்கை



(கொழும்பு)

எரிபொருள் கையிருப்பை பேணாத எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்துமாறு மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர பணிப்புரை விடுத்துள்ளார்.

எரிபொருட்களின் விலைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதையடுத்து, நேற்று முன்தினம் நாட்டின் பல பகுதிகளில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசை காணப்பட்டது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் இந்திய எண்ணெய் நிறுவனத்திடம் போதுமான அளவு எரிபொருள் உள்ளதால், எரிபொருள் பற்றாக்குறை ஏற்படும் என குழப்பமடைய வேண்டாம் என மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று முன்தினம் மாலை தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். விலை குறையும் என்ற எதிர்ப்பார்ப்பில் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் எரிபொருளை முன்பதிவு செய்யாததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

குறைந்தபட்ச கையிருப்பை 50 வீதமாக பராமரிக்கத் தவறும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அனுமதிப்பத்திரத்தை மீள் பரிசீலனை செய்து இடை நிறுத்துமாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். (நி)

# கொள்கை வட்டி வீதத்தை குறைக்கத் தீர்மானம்

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

மத்திய வங்கியின்கொள்கை வட்டி வீதத்தை 2.5 வீதத்தால் குறைக்கும் தீர்மானத்தின் பிரகாரம், உரிமம் பெற்ற வங்கிகள் வட்டி வீதங்களை குறைக்கும் என எதிர்பார்ப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

மத்திய வங்கியின் நாணயசபை கடந்த புதன் கிழமை கூடிய போது, கொள்கை வட்டி வீதத்தை 2.5 வீதத்தால் குறைக்க தீர்மானித்துள்ளது.

இதற்கிணங்க, மத்திய வங்கியின் நிலையான வைப்பு வட்டி வீதம் 15 வீதத்திலிருந்து 13 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

துணை நிலை கடன் வழங்கலுக்கான வட்டி வீதத்தை 14 வீதத்திற்கும் 250 அடிப்படை புள்ளிகளால் குறைப்பதற்கும் மத்திய வங்கியின் நாணயசபை தீர்மானித்துள்ளது.

அத்துடன், தற்போது மிகவும் வேகமாக பணவீக்கம் குறைவடைந்து வருவதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார். (நி)

# சிறுவர்களைக் கடத்துவது தொடர்பான தவறான தகவல்களை நம்ப வேண்டாம்

## பொலிஸார் கோரிக்கை

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களை கடத்தும் முயற்சிகள் தொடர்பாக சமூக ஊடகங்களில் வெளியாகிய செய்திகள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக சிறுவர்களை கடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தொடர்பாக பல முறைப்பாடுகள் பொலிஸாருக்கு வழங்கப்பட்டதாகவும் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சில முறைப்பாடுகள் தவறானவை எனவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் சிறுவர்களை கடத்தும் முயற்சிகள் தொடர்பில் சமூக ஊடகங்களில் பரவும் தகவல்கள் இதுவரை உறுதி செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்கள் மற்றும் இணையத்தளங்கள் ஊடாக தவறான தகவல்களை பரப்புபவர்கள் மற்றும் அந்த பிரசாரங்களுக்கு ஆதரவளிக்கும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் கடந்த காலங்களில் இது தொடர்பில் பல தடவைகள் விழிப்புணர்வை வழங்கியிருந்ததாகவும், எந்த பொறுப்பும் இன்றி வெளியிடப்பட்ட, பொதுமக்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்தும் இவ்வாறான தகவல்களுக்கு ஏமாற வேண்டாம் எனவும் பொலிஸார் பொது மக்களுக்கு அறிவித்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி.எஸ்.ஜி அணிக்காக இன்று கடைசி போட்டியில் விளையாடும் மெஸ்ஸி



அர்ஜென்டினா என்றாலே நினைவுக்கு வரும் முன்னணி கால்பந்து வீரர்களில் ஒருவரான மெஸ்ஸி. பார்சிலோனா அணிக்காக நீண்ட காலம் விளையாடி திடீரென பி.எஸ்.ஜி. அணிக்கு மாறினார்.

2021இல்இருந்துபிஎஸ்.ஜி அணிக்காக விளையாடி வருகிறார். இதுவரை 57 போட்டிகளில் விளையாடி 22 கோல்கள் அடித்துள்ளார். பி.எஸ்.ஜி அணியில் இருந்து மெஸ்ஸி வெளியேற வாய்ப்பு உள்ளதாக செய்திகள் வெளியாகிய வண்ணம் இருந்தன. இந்த நிலையில் பி.எஸ்.ஜி அணி இன்று சனிக்கிழமை கிளெர்மோன்ட் அணியை எதிர்த்து விளையாடுகிறது. இது தான் மெஸ்ஸி பி.எஸ்.ஜி அணிக்காக விளையாடும் கடைசி போட்டி என அந்த அணியின் பயிற்சியாளர் கிறிஸ்டோபர் கால்டியர் தெரிவித்துள்ளார். பார்சிலோனா அணிக்காக மெஸ்ஸி 474 போட்டிகளில் விளையாடி 520 கோல்கள் அடித்துள்ளார்.

பார்சிலோனா அணி நிர்வாகத்திடம், மீண்டும் பார்சி லோனாவில் விளையாட தங்களுக்கு விருப்பம் இருந்தால் 10 நாட்களுக்குள் தகவல் தெரிவிக்க வேண்டும் என மெஸ்ஸி தெரிவித்ததாக செய்திகள் வந்த வண்ணம் உள்ளன.

மெஸ்ஸி மீண்டும் அணிக்கு திரும்புவதை பார்சிலோனா மகிழ்ச்சியுடன் எதிர்பார்க்கும் நிலையில், அவர்களின் நிதி அமைப்பு சிக்கலாக இருக்கும் எனத் தெரிகிறது. (4)

# உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

வடமராட்சி உதைபந்தாட்ட சிரேஷ்ட சங்கம் நடத்தும் வடமராட்சி பிரதேசத்திற்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான 40 வயதிற்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று, நாளை, எதிர்வரும் 10 மற்றும் 11 ஆம் திகதியில்காலை 8மணியளவில் யங்லயன்ஸ் வி.க.மைதானத்தில் நடைபெறவுள்ளது என வடமராட்சி உதைபந்தாட்ட சிரேஷ்ட சங்கத்தின் தலைவர் ம.மதியழகன் தெரிவித்துள்ளார். (4)

# டோனிக்கு வெற்றிகரமாக நடந்து முடிந்த அறுவை சிகிச்சை



ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் இந்த சீசனில் முதல் முறையாக 3 நாட்கள் ஐ.பி.எல் இறுதிப் போட்டி நடந்தது. அகமதாபாத்தில் நடந்த இறுதிப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின.

இதில் 5 விக்கெட் வித்தியாசத்தில் சி.எஸ்.கே வெற்றி பெற்றது. இதன் மூலமாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 5ஆவது முறையாக சாம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றது.

இந்த தொடரின் லீக் போட்டிகளில் டோனி விளையாடும் போது முழங்காலில் காயம் ஏற்பட்டது. சில போட்டிகளில் கீப்பிங் செய்யும் போது அதை காண முடிந்தது.

அந்த காயத்துடன் தற்காலிகமாக சிகிச்சை எடுத்துக் கொண்ட நிலையில் இறுதிப்போட்டி வரை அவர் வலியுடனே விளையாடினார்.

இதையடுத்து, முழங்காலில் அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்காக டோனி இன்று மும்பையில் உள்ள கோகி லாபென் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில், எம்.எஸ்.டோனிக்கு முழங்காலில் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. (4)




தருண்

வாழ்க்கை கஷ்டம் எதோ பாக்கியராஜ் அளவுக்கு ஆடிட்டு போகும்னு பார்த்தா...



அது என்னடானா பிரபு தேவா லெவலுக்கு ஆடுது...

வைஷ்ணவி

ஏன்டா மணி 7.30 ஆகிட்டு, ஒரே சூடாவே இருக்கே.. இந்த சூரியன் போயிட்டானா.. இல்ல வீட்டுக்கு பின்னாடி அப்படியே தங்கிட்டானானு பாரு.



கயரூபன்

மீ: என்னமா குழம்பு இது...
அம்மா: கொள்ளு குழம்பு டா.
மீ: கொள்ளா, அது குதிரை ல தின்னும்.



அம்மா: கழுதையும் தின்னலாம் ஒன்னும் ஆகாது, மூடிட்டு தின்னு.

மதிவதனி




சுபராஜ்


'பாக்டீரியா' வோட படம் வரைய சொன்னா வெள்ளை பேப்பரை கட்டி கொடுத்திருக்கியே.. ஏன்?



விவரம் புரியாம பேசாதீங்க டீச்சர் இது கண்ணுக்கு தெரியாத 'பாக்டீரியா'

கிருசாந்தி

மனைவிக்கு எப்போதும் இரண்டே புகார் தான் இருக்கு,



கட்ட சாரீ இல்லை, துணிமணி வைக்க அலுமாரில இடம்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்பயிர்களில் 4 வகையான புழுக்களின் தாக்கம்

## அங்கீகரிக்கப்பட்ட கிருமி நாசினிகளை பயன்படுத்துமாறு ஆலோசனை

(கொழும்பு)

**நெற்பயிர்ச் செய்கைக்கு தற்போது 4 வகையான புழுக்கள் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதாக பதலகொட நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் தெரிவிக்கின்றது.**

நாட்டின் பல பகுதிகளிலும் இந்த புழுக்களின் தாக்கம் பதிவாகியுள்ளதாக அதன் பணிப்பாளர் பேராசிரியர் ஜயந்த சேனாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நெற்பயிர்கள் தொடர்பில் தொடர்ச்சியாக கவனம் செலுத்துவதன் மூலம் இந்த புழுக்களின் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியும்.

2 வாரங்களுக்கு மேல் புழுக்களின் தாக்கம் இருக்குமாயின் அதன் பாதிப்பு அதிகரிக்கலாம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் விவசாய திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கிருமி நாசினிகளை மாத்திரம் பயன்படுத்துமாறு அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

விவசாய அதிகாரிகளுக்கு இந்த விடயம் தொடர்பில் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இது ஒரு கறுப்பு நிற புழு எனவும் இதனால் நெற்பயிர் முழுமையாக பாதிக்கப்படக்கூடும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# அதிக மின்கட்டணம் செலுத்தும் நாடுகளில் இடம் பிடித்த இலங்கை

(கொழும்பு)

ஆசியாவிலேயே அதிக மின்சார கட்டணம் செலுத்தும் நாடுகளில் இலங்கையும் ஒன்று.

இலங்கையில் அதிகரித்துள்ள மின்கட்டணத்தினால் பெரும்பாலான மக்கள் கடும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் சில மின்சார பாவனையாளர்கள் தமது மாதாந்த மின்கட்டணம் கட்டுக்கடங்காத அளவிற்கு அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, ஜூன் மாதம் மின் கட்டணத்தில் மாற்றம் வரும் என எரி சக்தி அமைச்சர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பொசனை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவை

(கொழும்பு)

நாட்டின் முக்கிய நகரங்களில் இருந்து அனுராதபுரம் வரை விசேட போக்குவரத்து சேவைகள் இடம்பெறுவதாக அதன் பிரதி பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹம்ச தெரிவித்தார்.

பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு நேற்றில் இருந்து எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விசேட பேருந்து சேவைகள் முன்னெடுக்கப்படவுள் ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

அதேவேளை அனுராதபுரத்திற்கும் கொழும்புக்கும் இடையில் 12 விசேட புகையிரத பயணங்கள் இடம்பெறவுள்ளதாக ரயில்வே பிரதி பொது முகாமையாளர் எம்.ஜே. இண்டிபோலேஜ் தெரிவித்தார். (நி)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

12ம் ஆண்டு நினைவில்

மலர்வு 27 . 06 . 1983

உதிர்வு 16 . 05 . 2011



அமரர். இரத்தினம் இதயராசா (மாமா)

(திதி:வைகாசி வளர்பிறை சதுர்த்தசி-03.06.2023)

நீயிருக்கும் வரைதான், இவ்வுலகம்
அழகாய் இருந்ததடா
நீயில்லாதிருக்கும் இவ்விடம்
வாடிய சரமாய் ஆனதையா
வாடா! வந்தெம் இதய அவலம் தீரையா
வருவாயா?

மானா வளவு,
கரணவாய் கிழக்கு, கரணவாய்.

குடும்பத்தினர்.

(c-6663)


# இராசிபலன்

03.06.2023
வைகாசி 20, சனிக்கிழமை
சதுர்த்தி முற்பகல் 10.50 மணிவரை
விசாகம் காலை 5.56 மணிவரை

அனுசம் பின்னிரவு 5.27
சுபநேரம் -2.52-4.22 மணிவரை
இராகுகாலம்-8.52-10.22 மணிவரை

பூரணை விரதம்
சந்திராஷ்டமம்- பரணி


வளவன்





ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை.





அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு, எதிர்கால நலனில் அக்கறை கூடும்.





உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள்.





பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், போசன நன்மையுண்டு.





சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், காரிய அனுகூலமுண்டு.





எதிர்பார்த்த நற்பலன் உறவினர் வ்ழியில் கிடைக்கும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.





விரும்பிய காரியம் விரும்பியபடியே கைகூடும், போசன சுகமுண்டு, வழிபாடு குதூகலம் தரும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.





எதிர்கால நலன் கருதி புதிய திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.





ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் அகலும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.




கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண [illegible] நாள்.




விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, அன்பால் சாதித்துக் காட்டு நாள், தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரீகத்தின் உண்மையான பரீட்சை சகிப்புத்தன்மை.

# நயினாதீவு நாகபூசணி அம்பாள் திருவிழா முன்னாயத்த கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் - நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத் திருவிழா தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்டச்செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கடற்போக்குவரத்தில் ஈடுபடும் படகுகள் Stability proof test சான்றிதழை கட்டாயம் பெற்றுக் கொள்வதுடன், படகில் ஏற்றிச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கையையும் உறுதிப்படுத்துவதுடன் தாழ்வுப்படகுகள் ஏணிப்படி வசதி அமைத்தலை உறுதிப்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை, பொலிஸ் பர்துகாப்பு மற்றும்பெண்பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான தங்குமிட வசதிகள், போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுவோரை கைது செய்தல், கடற்போக்குவரத்தில் பாதுகாப்பு அங்கிகளை அணிவதை உறுதிப்படுத்தல், பாடசாலை மாணவர்களின் சாரணர் தொண்டர் சேவை, கடற்போக்குவரத்து நேரத்திற்கமைய தரைப்போக்குவரத்தை ஏற்படுத்தல், வாகனத்தரிப்பிடம், படகுகளில் பயணிகளுக்குரிய வசதிகள் இல்லாத படகுகளை சேவையில் ஈடுபடுவதை தவிர்த்தல், தரை மற்றும் கடற்போக்குவரத்து நேரஅட்டவணையை காட்சிப்படுத்தல், மின்இணைப்பு, படகுகளில் மோட்டார் வாகனங்களை ஏற்றும்போது பிரதேச செயலரிடம் அனுமதி பெறல், யாசகம் பெறுவோர் உள்வருவதை தடுத்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

மேலும் கடைகளுக்கு பிரதேச சபையின் அனுமதி, நடமாடும் வைத்திய சேவை, சுகாதாரம், மற்றும் குடிநீர் தேவை, மின்சாரத்தேவை, அமுதசுரபி அன்னதான ஒழுங்குகள், அம்புலன்ஸ் சேவை மற்றும் புனரமைக்க வேண்டிய வீதிகள் உள்ளிட்ட விடயங்கள் விரிவாக கலந்துரையாடப்பட்டன. (4-33)

# சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக சங்கானையில் விழிப்புணர்வு நடைபவனி




(யாழ்ப்பாணம்)
சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனியும் விழிப்புணர்வு பொதுக்கூட்டமும் சங்கானையில் இடம்பெற்றது.

வேர்ல்ட் விஷன் தொண்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்றது.

சங்கானை பிரதேச கலாசார மண்டபத்தில் ஆரம்பமான நடைபவனி வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் நிறைவுற்று பிரதேச செயலகம் முன்பாக பொதுக்கூட்டம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன், யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத், வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரேமினி, வேர்ள்ட் விசன் தொண்டு நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-33-104)



வரலாற்று சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் பந்தல்கால் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. காலை இடம்பெற்ற பூஜை வழிபாடுகளை தொடர்ந்து பந்தற்கால் நடும் நிகழ்வு இடம்பெற்றது. அதனை தொடர்ந்து அம்மன் வெளிவீதியுலா வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார். (படம்:-சிவசாந்தன்)

# சடலத்தை அடையாளம் காணவும்

(யாழ்ப்பாணம்)
சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் B/358/2023 வழக்கு இலக்கத்துடன் தொடர்புடைய இனம் காணப்படாத சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டு உள்ளதனால் உரியவர்கள் சடலத்தினை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு சடலத்தினை அடையாளம் காட்டுமாறு நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)



யாழ்ப்பாணம் - நல்லூர் சிவன் கோவில் (அம்மன்) தேர்த்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம் :- சிவசாந்தன்)

# முழுமதி அறிவியல் அரங்கம்

(யாழ்ப்பாணம்)
கலாபூஷணம் வே.க.பாலசிங்கத்தின் ஞாபகார்த்தமாக முழுமதி அறிவியல் அரங்கம் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு அரியாலை ஸ்ரீ கலைமகள்சனசமூக நிலைய முத்தமிழ் கலை அரங்கில் நிலைய தலைவர் இரா.மதிகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4)



யாழ்.நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

# ஸ்ரீ மூத்தநயினார் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)
ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்தநயினார் திருக்கோவில் மஹோற்சவம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பதினைந்து தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில் ஜூன் மாதம் 17 ஆம் திகதி சனிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறு நாள் ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை கொடியிறக்கமும் இடம்பெறும். (4)

# 500 வீட்டுத்திட்ட வீடுகளில் பயனாளிகள் இதுவரை குடியேறவில்லை

## யாழ்.ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
அரச வீட்டு திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட வீடுகளில் குடியமராத பயனாளிகளின் வீடுகளை திரும்பப் பெற வேண்டும் என்ற யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரனின் கோரிக்கையை பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நிராகரித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு இரண்டாவது கலந்துரையாடலில் அரச அதிபரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அபிவிருத்திக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தில் வழங்கப்பட்ட அரச வீட்டுத் திட்டங்களில் குடியமராதவர்கள் தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஆராயப்பட்டது.

யாழ் மாவட்டத்தில் வழங்கப்பட்ட வீடுகளில் சுமார் 500 இற்கும் மேற்பட்ட வீடுகளில் பயனாளிகள் வாசிப்பதில்லை என்ற குற்றச்சாட்டு பிரதேச செயலாளரிடம் முன்வைக்கப்பட்டது.

குறிப்பாக சங்கானை, தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் மற்றும் சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலகங்களில் அதிகளவிலான வீடுகள் பயனாளிகள் இன்றி காணப்படுவதாக அபிவிருத்திக் குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன் போது கருத்து தெரிவித்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபால சுந்தரன் அரச வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டதன் நோக்கத்தை பயனாளிகள் பூர்த்தி செய்யவில்லையாயின் அதனை மீளப் பெறுவதற்கு சுற்று நிருபம் இருப்பதாக தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், காணி, வீடு இல்லாதவர்கள் அரச வீட்டு திட்டத்தை பெற்றுள்ள நிலையில் அவர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டு திட்டங்களை மீளப் பெற முடியாது.

வீட்டுத் திட்டங்களை பெற்றவர்கள் தொழில் மற்றும் பிள்ளைகளின் கல்வி தேவை கருதி பிறிதொரு இடத்தில் வாழலாம் அதற்காக அவர்களின் திட்டங்களை மீள பெற முடியாது.

ஒருவேளை அரச வீட்டுத் திட்டங்களுக்கு மேலதிகமாக வீடு மற்றும் காணிகள் உள்ள வர்களாயின் அதனை சரிவர ஆராய்ந்து மாற்று நடவடிக்கைகளை பின்பற்ற முடியும் என தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ், யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களிலும் வீட்டு திட்டங்களில் குடி அமராதவர்களுக்கு மாற்று இடங்களில் வீடு காணிகள் இருக்கிறதா என ஆராய்ந்து விரிவான விபரங்களுடன் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். (4-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத முரண்பாடுகளை தோற்றுவிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை - நிஹால் தல்துவ



(கொழும்பு)
சிலர் மதங்களை அவமரியாதை செய்யும் வகையில் கருத்து வெளியிடுவதனால் மதங்களுக்கு இடையில் எதிர்பாராத பிரச்சினைகளை ஏற்படும் வாய்ப்பு காணப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பல்வேறு முரண்பாடுகளுக்கு அடிப்படையான அறிக்கைகள் தொடர்பில் பொலிஸார் விசேட கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய சந்தேக நபர்கள் கைது செய்யப்படுவார்கள்.

அத்துடன் நாட்டில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் மதங்களை அவமதிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடாமல் இருப்பது ஒவ்வொருவரின் பொறுப்பு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# 1 கிலோ கேரளக் கஞ்சாவுடன் திருமலையில் ஒருவர் கைது



(திருமலை)
திருகோணமலை - முள்ளிப் பொத்தானையில் கேரள கஞ்சாத் தொகையுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படையினரும் பொலிஸாரும் இணைந்து திருகோணமலை முள்ளிப்பொத்தானையில் நேற்று முன்தினம் சோதனையில் ஈடுபட்டனர்.

இதன்போது ஒரு கிலோ கிராமுக்கும் அதிகமான கேரள கஞ்சா தொகையுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை சோதித்த போது கேரள கஞ்சா தொகை கைப்பற்றப்பட்டதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவிக்கின்றது.

ஒரு கிலோகிராமும் 90 கிராம் எடையுடைய கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் அதன் பெறுமதி 6 இலட்சத்து 27 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர் தம்பலகாமம் பகுதியைச் சேர்ந்த 53 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

# இந்திய நிறுவனம் தயாரித்த கண்சொட்டு மருந்துகள் தொடர்பில் ஆய்வு

(கொழும்பு)
இலங்கையில் 30இற்கும் மேற்பட்டோருக்கு கண் நோய்த்தொற்றை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் குஜராத்தைச் சேர்ந்த இந்தியானா ஒப்தால்மிக்ஸ் தயாரித்த கண் சொட்டு மருந்துகளை மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பு ஆய்வு செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

குறித்த சொட்டு மருந்து நோய் தொற்றுக்களை கொண்டிருந்ததாக முறையிடப்பட்டமையை அடுத்து இந்த ஆண்டு ஏப்ரலில் இலங்கையின் சுகாதார அமைச்சினால் இந்த கண் சொட்டு மருந்து உடனடியாக திரும்பப் பெறப்பட்டுள்ளது.

கண் சொட்டு மருந்தில் பர்கோல்டேரியா செபாசியா என்ற பக்ரீரியா இருப்பது கண்டறியப்பட்டது. எனவே பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு இழப்பீடு வழங்குமாறு இலங்கை அரசாங்கம், இந்திய நிறுவனத்திடம் கேட்டுள்ளது.

இதனையடுத்து இந்த விடயம் தொடர்பில் ஆராயுமாறு இலங்கை அரசாங்கம், இந்திய அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டதன் பேரில் இந்திய மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பு ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)


## யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

**பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்**

**எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டமானது 18.06.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. அன்றைய தினம் புதிய, பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டியுள்ளதால் அனைத்துப் பழைய மாணவர்களையும் வருகை தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

**அதிபர்.** (சி-6662)


# கைத் தொலைபேசிகளின் விலை மீண்டும் குறைவடைய வாய்ப்பு

(கொழும்பு)
நாட்டில் நிலவும் பொருளாதார தடைக்கு மத்தியில் பல நூற்றுக்கணக்கான பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த இறக்குமதித் தடை தளர்த்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில் எதிர்காலத்தில் கையடக்கத்தொலைபேசிகளின் விலை குறையும் என தகவல் வெளியாகியுள்ளது.


குறிப்பாக கையடக்க தொலைபேசிகள், குளிர்சாதனப் பெட்டிகள், மின் விசிறிகள், பழங்கள் போன்ற அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள விதிகள் தளர்த்தப்படவுள்ளன.

இதற்கமைய 843 வகையான பொருட்களை இறக்குமதி செய்வதற்கான பண வரம்பு தேவையை நீக்குவதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது. இந்நிலையில் அந்தப் பொருட்களின் மொத்த மதிப்புக்கான பண வைப்பு வரம்பை நீக்குவதாக அறிவித்துள்ளது.

இதேவேளை இறக்குமதி கட்டுப்பாடு காரணமாக கடந்த சில மாதங்களாக கைத்தொலைபேசிகளின் விலைகள் பல மடங்காக அதிகரித்து காணப்பட்ட நிலையில் விரைவில் அவற்றின் விலைகள் மீண்டும் குறைவடையும் என தெரிவிக்கப்படுகிறது. (நி)

# கோழி இறைச்சியின் விலையை குறைக்க நடவடிக்கை

## அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவிப்பு



(கொழும்பு)
கோழி இறைச்சியின் விலையை குறைப்பதற்கான தீர்வு இன்னும் இரண்டு மூன்று நாட்களில் வழங்கப்படும் என வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக உள்ளூர் சந்தையில் கோழி இறைச்சியின் சில்லறை விலை அதிகரித்து வருகின்றது.

இந்த நிலையில் கோழிப் பண்ணை உரிமையாளர்களுடன் அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாட உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 280 | 400 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 150 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 280 | 300 | 350 | 300 |
| தக்காளி | 350 | 350 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 220 | 180 | 200 |
| கோவா | 450 | 400 | 400 | 400 |
| கரட் | 260 | 400 | 400 | 450 |
| பூசணி | 100 | 80 | 80 | 100 |
| புடோல் | 240 | 180 | 200 | 300 |
| வாழைக்காய் | 120 | 120 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 380 | 400 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 120 | 140 |
| பாகற்காய் | 450 | 550 | 450 | 600 |
| வெண்டக்காய் | 220 | 160 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 140 | 160 |
| பயற்றங்காய் | 450 | 350 | 350 | 300 |
| லீக்ஸ் | 360 | 380 | 400 | 450 |
| பீற்றூட் | 480 | 400 | 300 | 500 |
| கறிமிளகாய் | 400 | 380 | 500 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 600 | 1000 |
| போஞ்சி | 550 | 500 | 550 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 200 | 300 |
| கீரை – 1 பிடி | 140 | 80 | 100 | 100 |
| தேசிக்காய் | 350 | 400 | 350 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 90 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 260 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 550 | 500 | 600 | 600 |
| முள்ளங்கி | 200 | 200 | 200 | 300 |
| பொன்னரங்காணி | 80 | 80 | 120 | 50 |
| வல்லாரை | 40 | 40 | 50 | 50 |
| ஈரப்பலா | 120 | 150 | 200 | -- |

# பாகிஸ்தான் கடற்படைக் கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு வருகை

(கொழும்பு)
பாகிஸ்தான் கடற்படைக் கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

குறித்த கடற்படைக் கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது 134.1 மீற்றர் நீளமுள்ள போர்க்கப்பல் ஆகும். இது 169 பேர் கொண்ட குழுவினரால் நிர்வகிக்கப்படுகிறது.

இரு கடற்படைகளுக்கு இடையே ஒத்துழைப்பையும் நல்லுறவையும் மேம்படுத்தும் வகையில் குறித்த கப்பல் நாட்டுக்கு வருகைத்தந்துள்ளது.

தனது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு, குறித்த கப்பல் எதிர்வரும் 04 ஆம் திகதி பாகிஸ்தானுக்கு பயணிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர் 195





இவை நிறைவேறுமா என்று அடிக்கடி ஐயம் உண்டாகிறது. என்னுடைய நாயகர் மட்டும் மேற்குத் திசை சென்று அகாலத்தில் இறைவன் திருவடிகளைச் சேராதிருந்தால், இன்னும் சில காலம் ஜீவித்திருந்தால், என் மனோரதங்கள் எல்லாம் நிறைவேறியிருக்கும்.."

"இப்பேர்து மட்டும் என்ன குறைவு, தாயே! தாங்கள் நினைத்ததை நினைத்தபடி நிறைவேற்றித் தர வேண்டும் என்று சக்கரவர்த்தி கட்டளை பிறப்பித்திருக்கிறார் அல்லவா? அவருடைய புதல்வர்கள் இருவரும் தங்கள் மனத்தில் நினைப்பதற்கு முன்னாலேயே தங்களுக்கு இது விருப்பமாயிருக்கும் என்று ஊகித்தறிந்து, அதை நிறைவேற்றச் சித்தமாயிருக்கிறார்கள். அப்படியிருக்கும் போது."

"இருந்தாலும் என் மனத்தில் இப்போது அவ்வளவு உற்சாகம் இல்லை. ஏதேதோ கேள்விப்படுகிறேன். நான் செய்யும் கோவில் திருப்பணியினால் அரசாங்கப் பொக்கிஷம் காலியாகி விடுகிறதென்று சிலர் குறைபடுகிறார்களாம். 'சிவனுக்கு இவ்வளவு ஆல்யங்கள் என்னத்திற்கு?" என்று கேட்கிறார்களாம். மற்றவர்கள் கேட்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. காஞ்சியில் உள்ள இளவரசர் கூட."

இவ்விதம் பெரிய பிராட்டியார் சொல்லிய போது, ஆழ்வார்க்கடியான் ஓர் அடி முன்னால் வந்து நின்று, "தாயே! அந்த மாதிரி கேட்பவர்களில் அடியேனும் ஒருவன்!" என்றான்.

மகாராணி அவனைச் சற்று வியப்புடன் பார்த்தார். மற்றவர்கள், 'இது என்ன விபரீதம்?' என்ற முகபாவத்துடன் ஆழ்வார்க்கடியானை உற்று நோக்கினார்கள்.

ஆழ்வார்க்கடியான் மேலும் தொடர்ந்து ஆத்திரம் ததும்பிய குரலில், "அன்னையே! என் வயிறு கொதிக்கிறதே! இந்த மாதிரி அநியாயம் உண்டா? தர்ம தேவதையின் அவதாரமாக விளங்கும் தாங்கள் இந்த அநீதிக்கு இடம் கொடுக்கலாமா?" என்று அலறினான்.

திருமலையப்பனுக்குப் பக்கத்தில் நின்ற ஈசான சிவபட்டர், "மகாராணி! என் சகோதரன் இப்படித்தான் ஏதாவது உளறுவான். திடீரென்று அவனுக்கு வெறி வந்துவிடும். தயவுசெய்து மன்னித்து அருள வேண்டும்!" என்றார்.

அக்காலத்தில் சைவர்களும் வைஷ்ணவர்களும் தனித்தனி சாதியாகப் பிரிந்திருக்கவில்லை. ஒரே குடும்பத்தில் சைவப் பற்றுள்ளவர்களும் வீர வைஷ்ணவர்களும் இருப்பார்கள். ஒரே பட்டர் சிவன் கோவிலிலும் திருமால் கோவிலிலும் பூஜா கைங்கரியம் செய்வார். ஈசான சிவ பட்டர் அத்தகைய பரந்த நோக்கம் கொண்டவர். திருமலையப்பன் அவருடைய ஒன்றுவிட்ட சகோதரன். இருவரும் பரஸ்பரம் மிக்க அன்பு கொண்டவர்கள். ஆகவே தம்பியின் பதற்றமான பேச்சுக்காக ஈசான சிவபட்டர் மகாராணியிடம் மன்னிப்புக் கோரினார்.

தேவி புன்னகை புரிந்து, "திருமலை! சற்று அமைதியாகப் பேசு! இப்போது என்ன அநியாயம் நடந்து விட்டது?" என்று கேட் டார்.

"அம்மா! பேயாண்டியும் கையில் கபாலம் ஏந்திப் பிக்ஷை எடுத்துப் பிழைப்பவனுமாகிய சிவனுக்கு எத்தனை ஆலயங்கள்? எத்தனை மாடக் கோயில்கள்? எத்தனை கற்றளிகள்? உலகத்தையெல்லாம் காத்து ரக்ஷிக்கும் விஷ்ணு மூர்த்திக்கு ஒரு திருக்கோயில் கூடக் கிடையாதா? ஒரு பழைய கோயிலைத் திருப்பணியாவது செய்யக் கூடாதா?" என்று திருமலையப்பன் ஓலமிட்டான்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## காகமும் மகாராணியின் நெக்கிலேசும்

(நேற்றைய தொடர்ச்சி...)



மறு நாள் நரியார் காகம் இருந்த கூட்டடிக்கு சென்று காகத்தை அழைத்தது. காகம் இரண்டும் பறந்து வந்து சோகமாக இருந்தன.

அதனை கண்ட நரி உங்களுக்கு என்ன நடந்தது என்று கேட்டது. அப்போது ஆண் காகம் முழு விபரத்தையும் சொல்லி புத்திசாலியான நரியிடம் பாம்பைக் கொல்ல ஒரு உபாயம் சொல்லும் படி கேட்டது.

நரியும் அவர்களுக்கு எப்படியும் உதவி செய்ய வேண்டும் எண்ணத்துடன் ஆலோசித்தது. மறுநாள் நரி வெளியே சென்ற போது மகாராணியார் ஆற்றில் குளிப்பதற்காக தோழியருடனும் காவலருடனும் வருவதை அவதானித்தது.

மகாராணி தனது நகைகள் கழட்டி ஆற்றங்கரையில் வைத்து விட்டு குளித்துக் கொண்டிருந்தார்.

உடனே நரிக்கு உபாயம் தோன்றியது மகாராணி நாளைக்கு குளிக்கும் போது கரையில் வைத்த நெக்ளெஸ்சை காகம் தூக்கிக் கொண்டு போய் பாம்பின் புற்றுக்குள் போட்டால் அரச காவலாளிகள் பாம்பைக் கொலை செய்து நகைகளை மீட்பார்கள் அப்போது எனது நண்பரின் எதிரி இறந்து விடுவான் எனத் திட்டம் போட்டு, தனது திட்டத்தை காகங்களுக்கு கூறியது. மறு நாள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே காகங்களும் நரியும் அவ் ஆற்றங்கரைக்குச் சென்று சரியான சூழ்நிலை வரும் வரை காத்து இருந்தன.

மகாராணியாரும் வழக்கம் போல் நகைகளை கழட்டி ஆற்றங்கரையில் வைத்து விட்டு குளிக்கச் சென்றாள். இதனைக் கண்ட காகம் இதுதான் தருணம் என எண்ணி ராணி நகைகள் வைத்திருந்த இடத்திற்குச் சென்று நெக்ளெஸை தூக்கிச் சென்றது. காவலாளிகள் காகத்தைத் பின் தொடர்ந்தார்கள். காகம் அந்த நெக்கிளெஸ்சை எதிரியான பாம்பு இருந்த புற்றினுள் போட்டது. காவலாளாளிகள் நெக்ளெஸ்சை எடுக்க முயற்சித்தார்கள் அப்போது அதனுள் இருந்த பாம்பு சீறிக்கொண்டு வெளியே வந்தது. உடனே பாம்பை அடித்து கொலை செய்த பின் நெக்ளெஸ்சை மீட்டுச் சென்றார்கள். அதன் பின் காகங்கள் நிம்மதியாக வாழ்ந்தது.

ஆபத்தான நேரத்தில் காகம் நரியின் குடும்பத்தைக் காப்பாற்றியதால் நரியின் உதவியுடன் காகம் தனது குடும்பத்தை காப்பாற்றியது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனுடைய இலட்சியம் என்னவென்று அறிந்துகொண்டால்போதும் அதனைக்கொண்டே அவனை அறிந்து கொள்ளலாம். - ஹோம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தோனியின் ஆன்மீக நாட்டத்தையும் இரசிப்போம்

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மகேந்திரசிங் தோனி உலகில் அதிக மான கிரிக்கெட் ரசிகர்களைக் கொண்ட ஒருவர்.

அடக்கம், எளிமை, விட்டுக்கொடுக்கும் பண்புடைமை, ஆய இலட்சணங்கள் அவரின் அணிகலன்களாகும்.

எதுவாயினும் கிரிக்கெட் உலகில் அவரின் ஆட்டம் ரசிகர் கூட்டத்தைப் பெருக்கிக் கொண்டது. இஃது ஒரு சிறு குறிப்பு மட்டுமே.

இங்கு நாம் கூறவந்த விடயம் தோனியின் கிரிக்கெட் ஆட்டம் பற்றியதல்ல.

மாறாக, இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் தோனி அவர்கள் சில நாட்களுக்கு முன்னர் முழங்காலில் ஏற்பட்ட காயம் ஒன்றுக்காக சத்திரசிகிச்சை செய்து கொண்டார்.

இவ்வாறு சத்திரசிகிச்சை செய்த தோனி தன்னுடன் பகவத்கீதையை வைத்திருந்து படித்தார் என்ற செய்தி சமூகவலைத்தளங்களில் முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளது.

தோனி பகவத்கீதை படித்ததில் என்ன ஆச்சரியம் இருக்கிறதென்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

ஆனால் இங்குதான் ஓர் உண்மையை நாம் புரிந்தாக வேண்டும். அதாவது, உலகின் மிகப்பெரும் கிரிக்கெட் ஜாம்பவானாகிய தோனியிடம் இருக்கக்கூடிய ஆன்மீக சிந்தனையை நாம் ஈண்டு கவனிப்பது இங்கு முக்கியமானது.

ஆம், விளையாட்டு மைதானத்தில் கிரிக்கெட் போட்டிகளைப் பார்த்து ரசித்து மகிழுகின்ற இரசிகர்கள் தங்கள் விருப்பத்துக்குரிய கிரிக்கெட் வீரர் ஒருவர்; தனது சத்திரசிகிச்சையின்போது பகவத்கீதையை பாராயணம் செய்து கொண்டிருந்தார் எனில், அதற்குள் இருக்கக்கூடிய இறை நம்பிக்கையையும் ஆன்மீக நாட்டமும் எத்துணை உயர்வானதென்பது இங்கு அவதானிக்கப்பட வேண்டிய அம்சமாகும்.

உண்மை. இந்த உலகில் மிகப்பெரும் சாதனை படைத்தவர்கள் அனைவரும் ஏதோவொரு வகையில் ஆன்மீகத்தின் மீது அதீத நம்பிக்கை உடையவர்களாக இருந்துள்ளனர்.

எனினும் நாம் அவற்றைக் கவனிக்காமலே விட்டுவிடுகின்றோம்.

உண்மையில் நாம் யாரை இரசிக்கின்றோமா யாரை மதிக்கின்றோமோ அவர்களின் சாதனை என்பதைக் கடந்து, அவர்களின் வாழ்வியல் முறைமை எவ்வாறாக உள்ளதென்பதை நிச்சயம் நாம் நோக்குதல் வேண்டும்.

அப்போதுதான் எங்கள் வாழ்வும் அர்த்தமுடையதாக அமையும்.

அந்தவகையில் கிரிக்கெட் வீரர் தோனி அவர்கள் தனது சத்திரசிகிச்சையின்போது பகவத்கீதையைப் பாராயணம் செய்தார் என்பதை எவரும் ஒரு செய்தியாகப் பார்த்து விடாமல் அதற்குள் இருக்கக்கூடிய மெய்மையை உள்ளத்தால் உணர்ந்து கொள்ள வேண்டும்.

# ஜனாதிபதி ஒத்துழைப்பு வழங்கினால் நாட்டை மேலும் முன்னேற்ற முடியும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

(கொழும்பு)

ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்கினால், நாட்டை இன்னும் முன்னேற்றக் கூடியதாக இருக்கும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2022 மே 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக நாம் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளோம்.

காலி முகத்திடலில் இடம்பெற்ற போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலை அடுத்தே நாட்டில் வன்முறை இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

ஆனால், அதற்கு பல மாதங்களுக்கு முன்னரே பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற கூட்டங்களின் போது, இவ்வாறான வன்முறை நாட்டில் இடம்பெற வாய்ப்புள்ளதாகக் கூறப்பட்டது.

இதுதொடர்பாக புலனாய்வுப் பிரிவினரால் பாதுகாப்புத் தரப்பினருக்கு முன்கூட்டியே தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், அதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாத காரணத்தினால்தான் அழிவை நாம் அனைவரும் சந்தித்தோம்.

இவ்வாறான சம்பவங்கள் இனியும் இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அன்று நாட்டில் இருந்த பொருளாதார பிரச்சினைகளுக்கு எதிராக அமைதியாக போராடிய மக்களால் இந்த வன்முறை மேற்கொள்ளப்படவில்லை. இது திட்டமிடப்பட்ட செயற்பாடாகும். ஒரு குழுவினரால்தான் இது மேற்கொள்ளப்பட்டது.

இவர்களின் பின்னணியில் அரசியல் பலம் உள்ளது. அன்று சமூகங்களுக்கிடையில் பிரச்சினையை ஏற்படுத்த முயற்சித்த தரப்பினர், இன்று மத ரீதியான பிரச்சினைகளை ஏற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இதனை அப்படியே விட்டால் இனங்களுக்கிடையில் இவ்வாறான தரப்பினரால் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே, அரசாங்கம் என்ற ரீதியில் இதுபோன்ற செயற்பாடுகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# யாழ்.மாவட்டத்தில் சிறுவர் வன்கொடுமை அதிகரிப்பு

## யாழ்.அரச அதிபர் சிவபாலசுந்தரன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சிறுவர் வன்கொடுமை அதிகரித்து வருவதுடன், இது எதிர்காலத்தையும் பாதிக்கக் கூடிய பிரச்சினை. ஆகவே இதனைத் தடுக்க வேண்டியது எமது கடமை என யாழ். மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் மேற்கின் சங்கானையில் சிறுவர் வன்கொடுமையைத் தடுத்தல் என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வு நடைபவனி நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே யாழ்.மாவட்ட அரச அதிபர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து மேலும் உரையாற்றுகையில், கடந்த 4 மாதங்களுக்கு மேலாக இந்த மாவட்டத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அபிவிருத்தி சார் நடவடிக்கைகள், சமூகம் சார் பிரச்சினைகள் சம்பந்தமாகத் தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொண்டபடியே இருக்கின்றேன்.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பல கலந்துரையாடல்களையும் சமூகப் பிரச்சினைகளைத் தடுப்பதற்கான தந்திரோபாய நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அதில் ஓரளவு வெற்றியும் கண்டிருக்கின்றோம்.

எங்களுடைய மாவட்டத்தில் சிறுவர் வன்கொடுமை என்பது அதிகரித்ததொன்றாகவும் எதிர்காலத்தையும் பாதிக்கக் கூடிய பிரச்சினையாகவும் காணப்படும் அதேவேளை அதனை அலட்சியப்படுத்திக்கொண்டிருக்கின்றோம்.

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய கல்வி நிலை குறித்து வெட்கமாக உள்ளது. கல்வியில் முதலிடத்திலிருந்த மாவட்டம் தற்போது இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதன் பின்னணி என்ன?

மேலும் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குமான இடைவெளி அதிகரித்துவிட்டது. பிள்ளை தனது பிரச்சினைகள் குறித்துப் பெற்றோரிடம் உரையாடுவதற்கான சந்தர்ப்பங்களும் வழங்கப்படுவதில்லை.

இதனாலேயே பிள்ளைகள் தவறான வழிநடத்தலின் கீழ் சென்று இவ்வாறு தவறான வழியில் பயணிக்கின்றனர். இது குறித்துப் பெற்றோர்கள் அதீத கவனம் எடுக்க வேண்டும்.

மேலும் ஆசிரியர்களும் மாணவர்களின் நலனில் அக்கறை எடுக்க வேண்டும்.

எமது மாவட்டத்தில் சிறுவர் வன்கொடுமை மாத்திரமின்றி சட்டவிரோத போதைப்பொருள்பாவனை சார்ந்த முறைப்பாடுகளும் நீதிமன்ற வழக்குகளில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் குறித்து தீவிர நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளேன் எனவும் தெரிவித்துள்ளார். (ம-7,104)

## வவுனியாவில் எரிபொருளுக்கு நீண்டவரிசை

(வவுனியா)

வவுனியாவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இரண்டாவது நாளாக நேற்றும் எரிபொருளை பெற்று கொள்ள வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை காணப்பட்டது. அத்தோடு நகர மத்தியில் உள்ள சில எரிபொருள்நிரப்பு நிலையங்களில்எரிபொருள் இல்லை என பதாகை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

எரிபொருட்களின்விலைகள் குறைக்கப்பட்டிருந்தமையினால் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் எரிபொருளுக்கான முன்கூட்டிய பதிவினை மேற்கொள்ளாமையினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மனவளக்கலைப் பயிற்சிகள்


(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுக வுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

இன்று சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை, மாலை 5 மணி தொடக்கம் 7 மணிவரை எளியமுறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள பேராசிரியர் G.R.சீதாலட்சுமி வழங்குவார். மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி நகர் சித்தி விநாயகர் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று வெகுசிறப்பாக நடைபெற்றது. (படம்:யதுபாஸ்கரன்)

# இடைநிறுத்தப்பட்ட நியமனங்களை உடனடியாக மீள வழங்குங்கள்

## வடமாகாண செயற்றிட்ட உதவியாளர்கள் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

**இடைநிறுத்தப்பட்ட தமது நியமனங்களை உடனடியாக மீள வழங்குமாறு கோரி வடமாகாண செயற்றிட்ட உதவியாளர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.**

வவுனியா புதிய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று காலை ஆரம்பமான குறித்த பேரணி மணிக்கூட்டு சந்தியை அடைந்து அங்கிருந்து ஜனாதிபதியின் உப அலுவலகம் வரை சென்று அங்கு ஜனாதிபதிக்கு அனுப்பும் வண்ணம் மகஜர் வழங்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள்,

நல்லாட்சி அரசாங்கம் 2019 அன்று எடுத்த அமைச்சரவை முடிவின்படி தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வு அமைச்சகங்கள் மூலம் மேற்கூறிய பதவிக்கு விண்ணப்பங்கோரி வர்த்தமானி வெளியிடப்பட்டது.

பிற்காலத்தில், ஜூன் மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் முறையே இரண்டு நேர்காணல்கள் பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றன. பின்னர் 2019 அன்று 6547 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டது. நியமிக்கப்பட்டவர்களின் பெயர் பட்டியல் அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும் அனுப்பப்பட்டது. இந்நிலையில் எமது கடமைகளை தொடர்புடைய அலுவலகங்களில் நாம் ஏற்றுக் கொண்டோம்.




இந்தச் சூழலில், ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதுடன், நியமனத்தை இடைநிறுத்திய சுற்றறிக்கை அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும்தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரால் தொலைநகலில் அனுப்பப்பட்டது.

அதற்கமைய நாம் பணியிலிருந்து ஒதுங்கியிருந்தோம். தேர்தல் முடிவடையும் வரை காத்திருந்தோம். அதன்பின்னர் மீண்டும் பணிகளை பொறுப்பேற்க சென்ற போது எம்மை சேவையில் இணைக்க முடியாது எனத் தெரிவித்தனர்.

எங்கள் நியமனங்கள் நிதி அமைச்சினால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக எமக்கு தெரிவிக்கப்பட்டது. பின்னர் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரால் மேற் கண்ட நியமனத்தை மீட்டெடுக்க தொடர்ந்து வலியுறுத்தப்பட்ட போதிலும், இதுவரை எந்த தகவலும் அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கவில்லை.

நான்கு வருடங்களாக நாங்கள் வேலையில்லாமல் இருக்கிறோம். இதன் விளைவாக, நாமும் எங்கள் குடும்ப உறுப்பினர்களும் மிகுந்த சிரமங்களை எதிர் கொண்டுள்ளோம். வாழ்வாதார இழப்பு காரணமாக கடுமையான துயரங்களுக்கு ஆளாகியுள்ளோம்.

எனவே இந்த அரசு எமக்கு நியமனம் வழங்குவீர்களா இல்லையா என்பதையாவது உறுதியாக கூறும்படி கேட்டு நிற்கின்றோம் என தெரிவித்தார். (4-299)

# கட்டாக்காலி மாடுகளை மடக்கிப் பிடித்த நகரசபை



(நெளுக்குளம்)

வவுனியாவில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக வீதிகளில் நடமாடித் திரிந்த 26 கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டு வவுனியா நகரசபை வளாகத்தில் அடைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு வவுனியா பண்டாரிக்குளம் மற்றும் வைரவர்புளியங்குளம் ஆகிய பகுதிகளில் இருந்து குறித்த மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாடுகளின் உரிமையாளர்கள் 2 ஆயிரம் ரூபாய் தண்டப்பணத்தினை நகரசபைக்கு செலுத்தி அவற்றை மீளவும் பெற்றுக் கொள்ளமுடியும் என நகரசபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-299)

# கணவனால் தாக்கப்பட்ட பெண் யாழ்.போதனாவிற்கு மாற்றம்

(கண்டாவளை)

கிளிநொச்சி கோணாவில் பகுதியில் கணவனால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த இளம் குடும்பப் பெண் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி கோணாவில் மத்தியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இரண்டு பிள்ளைகளின் தாயான இளம் குடும்பப் பெண் அவரது கணவரால் கண்மூடித்தனமாக தாக்கப்பட்டு இரண்டு கண்கள் மற்றும் தலைப்பகுதியில் பல காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (4-315-316)

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசிதம்பரத்தின் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் உடுப்பிட்டு நல்லூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் அமரர் மு.சிவசிதம்பரத்தின் நினைவுதின நிகழ்வு நாளைமறுதினம் 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி பஸ் நிலையத்துக்கு அருகாமையில் அன்னாரின் உருவச் சிலைக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது என கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (4-60)

# உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடாத்தம் லீக் சுற்றுக்கிண்ண போட்டியில் நாளை ஞாயிற்றுக்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டு கழகமும் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டு கழகமும் போதவுள்ளன. அரியாலையில் உள்ள யாழ்.உதைபந்தாட்ட பயிற்சி நிலையத்தில் மாலை 3.30 மணிக்கு குறித்த போட்டி நடைபெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (4-33)

# யாழில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் அண்மையில் இரவு வேளை இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் மேனன் தலைமையிலான அணியினரால் கடந்த வாரம் யாழ். நகரில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு, வாள்வெட்டுக்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள் மற்றும் வாள்கள் மீட்கப்பட்டுள்ளது.



கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 19 மற்றும் 20 வயதுடைய கொக்குவில் மற்றும் சுதுமலை பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் கடை மூடப்பட்டிருந்த நிலையில் குறித்த இளைஞர்கள் கடையில் யூஸ் தருமாறு கோரியதாகவும் கடைப் பூட்டியதால் உரிமையாளர் தர மறுத்ததன் காரணமாக ஏற்பட்ட தகராறால் இத் தாக்குதலை மேற்கொண்டதாக கைது செய்யப்பட்ட நபர்கள் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிவித்துள்ளனர். குறித்த தாக்குதலை 6 பேர் கொண்ட குழு மேற்கொண்டதாகவும் அதில் மூவர் தலை மறைவாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (4-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வார இறுதி...

இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக, டுவிட்டர் பதிவொன்றில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

விலை குறைப்ப்பை எதிர்பார்த்து எரிபொருள் நிரப்பு நிலையங்கள், கடந்த சனிக்கிழமை, முன்பதிவுக் கட்டளைகளை வழங்காமை மற்றும் குறைந்த பட்ச கையிருப்பை பேணாமை என்பன, நிரப்பு நிலையங்களில் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர கூறியுள்ளார்.

அத்துடன், விலை குறைப்பு மற்றும் எரிபொருள் ஒதுக்கம் அதிகரிப்புக்குப் பின்னர், பொதுமக்களின் உடனடித் தேவை அதிகரித்தமையும் இதற்கு காரணமாகும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7)

## 400 பொருட்...

கள் தளர்த்தப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார மதிப்பீட்டு பிரிவு மற்றும் நிதி அமைச்சு என்பன இணைந்து இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளன.

இதன்போது, நாட்டிற்கு முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

முன்னதாக இறக்குமதி தடைகளை நீக்குமாறு ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையை வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-7)

## உரிய நடவடி...

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் நேற்று வடமராட்சி பகுதிக்கு மக்கள் சந்திப்புக்காக சென்ற வேளை புலனாய்வாளர் ஒருவரால் தாக்குதலுக்கு உள்ளானதாகவும், அவ்விடத்துக்கு வந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் துப்பாக்கியை காட்டி மிரட்டியதாகவும் தொலைபேசி மூலமாக முறையிட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உடனடியாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு தெரியப்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து கஜேந்திர குமார் பொன்னம்பலத்திடம் எழுத்து மூலமாக முறைப்பாடு ஒன்றினை இன்று வழங்குமாறும், அவ்வாறு வழங்கிய பின்னர் மேலதிக நட வடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார். (ம-7,60)

## கஜேந்திரகுமார்...

குறித்த சம்பவம் தொடர்பில் யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று கஜேந்திரகுமார் கருத்து தெரிவிக்கையில்,

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் விளையாட்டுக் கழகத்தினரின் அழைப்பின் பேரில் மைதானத்தில் விளையாட்டுக் கழக உறுப்பினர்களை சந்தித்துக் கொண்டிருந்த வேளை என்னோடு கட்சியின் உறுப்பினர்களும் உடன் இருந்தார்கள்.

குறித்த சந்திப்பு நடந்துகொண்டிருந்தபோது இரண்டு இளைஞர்கள் குறித்த இடத்துக்கு மோட்டார் சைக்கிளில் வந்து எங்களை அவதானித்துக் கொண்டிருந்தார்கள்.

நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் எமது அமைப்பின் கொள்கைக்கு அமைவாக MSD பாதுகாப்பை பெறாமல் இருப்பதனால் எங்களின் அணியை சார்ந்த பகுப்பாய்வு உத்தியோகத்தர் குறித்த இரு இளைஞர்களிடமும் சென்று என்ன விடயத்துக்கு வந்துள்ளீர்கள்? நீங்கள் யார் என வினவியபோது, அவர்கள் ஒரு தெளிவான பதிலைக் கொடுக்க மறுத்தார்கள்.

அதன்போது இங்கு வந்திருப்பவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அவருக்கு பாதுகாப்பு பிரச்சினைகள் இருக்கிறது. நீங்கள் யாரென்பதை வெளிப்படுத்தாமல் இங்கே இருக்க முடியாது என்று கூறியபோது தாங்கள் புலனாய்வுப் பிரிவினர் என்று அறிமுகப்படுத்திய போது நான் அவ்விடத்துக்கு சென்று உங்களின் உத்தியோகபூர்வ அடையாள அட்டையை காட்டுமாறு கேட்ட வேளையில் அதனை தர மறுத்தார்கள். அப்போது எனது அடையாளத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தி எனக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலையும் குறிப்பிட்டு நீங்கள் அடையாள அட்டையை காட்டா விட்டால் உங்களை செல்வதற்கு அனுமதிக்க முடியாது என்று சொன்ன இடத்தில் அதில் ஒருவர் என்னை தாக்கி எனது பகுப்பாய்வு உத்தியோத்தருக்கும் ஹெல்மெட்டால் அடித்துவிட்டு ஓடினார். அப்போது எனது சாரதியும், பகுப்பாய்வு உத்தியோகத்தரும் அவருக்கு பின்னால் ஓடினாலும் கூட அவரைப் பிடிக்க முடியவில்லை.

மற்றவரை அங்கு நின்ற இளைஞர்களும், என்னுடைய அணியை சார்ந்தவர்களும் சுற்றி வளைத்து அவரிடம் அடையாள அட்டையை கேட்டுக் கொண்டிருந்த நிலையில் அயலில் உள்ள பாடசாலையில் இருந்த பொலிஸ் ஒருவரும் விளையாட்டு சீருடையை அணிந்த ஒருவரும், அவரோடு பொலிஸ் சீருடையில் ஆயுதத்தை தாங்கியிருந்த இன்னுமொருவரும், வேலிக்கு கிட்ட வந்து அவர்கள் எங்களுடையவர்கள். நீங்கள் அவரை தடுத்து வைக்க முடியாது. என கடுமையான வார்த்தைகளில் கூறி அவரை உடனடியாக விடுங்கள் என்ற கருத்தை கூறியிருந்தார்.

அப்போது நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினர். அவர்கள் எனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக நடந்து கொண்டுள்ளார்கள். அவர்களின் இடுப்பில் பிஸ்டல் இருப்பதாக சந்தேகிக்கிறோம். அப்படியான நிலையில் அவர்கள் தங்களின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தாமல் இருப்பது சட்டவிரோதம். அந்த வகையில் வந்து அவர்களை போகவைக்க உங்க்ளுக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்று சொன்ன இடத்தில், குறித்த பொலிஸார் கடுமையான தூஷண வார்த்தைகளை பயன் படுத்தி என்னை ஏசியது மட்டுமல்ல. ஒரு கட்டத்தில் அவர் தனது இடுப்பில் இருந்த பிஸ்டலையும் லோட் பண்ணி எனக்கு குறி வைத்தார்.

அந்த நேரம் ஒரு பொலிஸ் ஜீப் மைதானத்துக்குள் வந்தது. அதிலிருந்து இறங்கி வந்த வயதான பொலிஸ் அதிகாரி தன்னை acting oic மருதங்கேணி என அறிமுகப்படுத்தி எங்களால் சுற்றி வளைக்கப்பட்டு வைத்திருந்த நபர் தங்களுக்கு உரியவர் . அவரை விடுங்கள் என கூறியபோது, நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக என்னை அடையாளப்படுத்தி எனது அடையாள அட்டையையும் காட்டி நடந்த சம்பவத்தை மிக தெளிவாக அவருக்கு எடுத்துக் கூறி இங்கே எனது உரிமைகள் முற்று முழுதாக மீறப்பட்டுள்ளதையும் தெரிவித்தேன். அதனை கேட்ட குறித்த பொலிஸ் அதிகாரி குறித்த இருவரையும் punishment transfer இல் அனுப்புவதாகவும் கூறி இருந்தார். அதனை நான் ஏற்க மறுத்தபோது மருதங்கேணி பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு அழைத்தார். அப்போது நான் எனக்கு மருதங்கேணி பொலிஸாரினால்தான் அச்சுறுத்தல் உள்ளது. எவ்வகையில் வர முடியும் என கேள்வி எழுப்பினேன். இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பேன் என கூறினேன்.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட மனித உரிமைகள் ஆணையாளர் கனகராஜ் அவர்களிடமும் முறையிட்டுள்ளேன் என்றார். (ம-7,33,60,104)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 02/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1588
வெற்றி இலக்கங்கள்
மீனம் 3 4 5 5 3 5
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.06.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1163
G 43 45 46 57
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.06.02
சீட்டிழுப்பு இலக்கம் 3375
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
F 03 31 36 44
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 02/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1481
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
U 01 03 24 58 64

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.02
சீட்டிழுப்பு இலக்கம் 442
மீனம் 04 15 18 45 மீனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/06/02
சீட்டிழுப்பு இலக்கம் 5133
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
T 5 7 8 1 0 9
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2107
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.06.02
தினம் வெள்ளிக்கிழமை
C 03 33 36 65
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,750,340/-
DLB

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.02
வெற்றி வாரம்: 4268
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 48,598,293.30
வெற்றி இலக்கங்கள்
09 12 36 68 H
DLB

சசிரி
வெற்றி வாரம் 331
சீட்டிழுப்பு திகதி 2023.06.02
பச்சை
வெற்றி இலக்கங்கள் 07 15 21
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,994,360/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 5,725,947.40
திகதி 2023-06-02
வெற்றி வாரம் 3819
வர்ணம் கரும் நீலம்
வெற்றி இலக்கங்கள் 03 15 21 34
கன்னி
ரூ. 10,117,220/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 38 31 40 58 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 334,781,329.00
1283
2023.06.02 வெள்ளி
DLB

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 1933
சீட்டிழுப்பு திகதி: 2023.06.02
ரூ. 50,922,730.60
வெற்றி இலக்கங்கள்
08 17 24 61 Y
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ISUZU (26 SRI) Antique Lorry விற்பனைக்கு

26 அடி நீளமுடைய Container 2.5 Ton Hyster fork lift Gas இல் இயங்குவது.

தொடர்புகளுக்கு (15830)

**075 887 5036**



## காணி விற்பனைக்கு

கோப்பாய் இராசவீதி சந்திக்கு அண்மித்து உள்ள கிருஸ்ணன் கோவிலுக்கு மேற்கு புறமாக மானிப்பாய் வீதியிலிருந்து வடக்கே 20 மீற்றர் தூரத்தில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது.

- நல்ல நீர் ஊற்று உள்ள கிணறு மற்றும் காய்க்கும் 7 தென்னை மரங்கள் உள்ள இடம்.
- வீடுகட்டுவதற்கும் விவசாயம் செய்வதற்கும் வியாபார நோக்கத்திற்கும் உகந்த இடம்.

(15832)

**077 310 1357**



## வேலையாட்கள் தேவை

யாழ்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வணிக நிலையத்திற்கு கீழ்வரும் வேலைகளிற்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் திங்கள் முதல் புதன் வரை காலை 10 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.

1. Computer Billing (ஆண்/பெண்)
2. பில் கட்டி கொடுப்பதற்கு (ஆண்)
3. Delivery செய்வதற்கு (ஆண்)

விநாயகர் ஸ்ரோஸ்
424, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
**077 419 5015** (15828)


# புதிய பயங்கரவாதச் சட்டம் சர்வதேச சட்டத்துக்கு உட்பட வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச் சபை நீதியமைச்சருக்குக் கடிதம்

புதிய பயங்கரவாத சட்டம் சர்வதேச சட்டத்துக்கும் சர்வதேச நியமனங்களுக்கு அமைவாக காணப்பட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை நீதியமைச்சருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளது.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பான தமது கரிசனைகளை உள்ளடக்கி சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசியப்பிராந்தியப் பிரதிப் பணிப்பாளர் ஸ்மிரிதி சிங்கினால் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் மிகுந்த கரிசனைகளைத் தோற்றுவித்துள்ளது.

இச்சட்டமூலமானது கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு மனித உரிமைகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகக் காணப்படுகின்றது.

அதுமாத்திரமன்றி இச்சட்டமூலம் இலங்கை அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரணானதாகவும் காணப்படுகின்றது.

மேலும் இச்சட்டத்தின் கீழ் பயங்கரவாதக் குற்றமாகக் கருதப்படக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் உரியவாறானதும் தெளிவானதுமான வரைவிலக்கணம் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன் அரச பாதுகாப்பு அதிகாரிகள் வசம் மட்டுமீறிய அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று இச்சட்டவரைபைத் தயாரித்தவர்கள் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட நிபுணர்களால் முன்வைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கும் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் மற்றும் நியமங்களுக்கு அமைவாகவும் இதனைத் தயாரிக்கவில்லை.

எனவே சர்வதேச சட்டத்தின் கீழ் இலங்கை கொண்டிருக்கும் கடப்பாடுகளைப்பூர்த்திசெய்ய வேண்டுமெனில் இச்சட்டமூலத்தில் பல்வேறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றே நாம் கருதுகின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-7)







## மரண அறிவித்தல்



### திரு.விஜயகுமார் முத்துக்குமார்

(முன்னாள் முல்லைத்தீவு மாவட்டத்தின் வீடமைப்புத் திட்டத்தின் முகாமையாளர், இளைப்பாறிய கனடா ஒன்ராறியோ மாநில வருமானவரி இலாகாவின் வருமானவரி பரிசோதகர், பழைய மாணவன்- யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி)

யாழ். கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடா Markham ஐ வதிவிடமாகவும் கொண்ட விஜயகுமார் முத்துக்குமார் அவர்கள் (28.05.2023) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமார் - கண்மணி தம்பதியினரின் பாசமிகு மூத்த புதல்வரும் பண்டிதர் பொன்னுத்துரை - நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும் தர்மலிங்கம் - இரத்தினம் தம்பதியினரின் பாசமிகு பெறாமகனும் விமலாதேவி(ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் சஞ்ஜித்குமார், கஜந்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் மாலினி சஞ்ஜித்குமார் அவர்களின் அன்பு மாமனாரும் செல்வகுமார், தர்மமூர்த்தி (பிரித்தானியா), பாஸ்கரமூர்த்தி, ஜெயலஷ்மி, டாக்டர் நவலஷ்மி, காலஞ்சென்றவர்களான ஜெயக்குமார், சுகுமார், மகாலஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகேஸ்வரி திருநாவுக்கரசு, கலியாணசுந்தரம் காலஞ்சென்ற கமலாதேவி தர்மலிங்கம், பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர் - யாழ். பல்கலைக்கழகம்), டாக்டர் விமலேந்திரன், பாலேந்திரன், யோகேந்திரன், ரவீந்திரன், புவனேந்திரன், நிர்மலாதேவி லோகராஜ், காலஞ்சென்ற வத்சலாதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.06.2023 நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விமலாதேவி விஜயகுமார்(மனைவி)
+14164507589
சஞ்ஜித்குமார் விஜயகுமார்(மகன்)
+14167011763

தகவல் -
த.பாஸ்கரமூர்த்தி
(சகோதரன் -தம்பி)
(உரிமையாளர் - மகாலக்சுமி தேனீரகம்- கொக்குவில்)
(15824)



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ONLINE APPLICATIONS
- VISA APPOINTMENTS
- PASSPORT APPLICATION
- POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport உக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்.

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777
(C-6665)



## அமெரிக்க லொத்தர் விசா

V2 TRAVELS

2022ம் ஆண்டு விண்ணப்பித்தவர்களின் பெறுபேறுகள் வெளியாகி விட்டன.




அதிஸ்டசாலியாக தெரிவு செய்யப்பட்டவர்களின் அடுத்த கட்ட விசா நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன.

0768226240 / 0768226241
(C-6665)



## பணிப்பெண் தேவை

அளவெட்டியில் வசிக்கும் குடும்பம் ஒன்றின் குழந்தைகளை பராமரிக்க பணிப்பெண் தேவை.

**சம்பளம் : 60,000/= ரூபா வழங்கப்படும்.**

தொடர்புகளுக்கு (15829)

**077 784 2885**



## உடனடி வேலைவாய்ப்பு

யாழ் நகர் மத்தியில் இயங்கும் Fancy Shop ஒன்றிற்கு பெண் விற்பனை பிரதிநிதிகள் தேவை.

Contact Number (15825)

**076 129 7435**



## காணி விற்பனைக்கு

### யாழ்ப்பாணம் புத்தூரில் 8 பரப்பு காணி விற்பனைக்கு

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் வீதியில்
- புத்தூர் பிரதான தண்ணீர்த் தாங்கி அருகாமையில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- பரப்பு ஒன்றின் விலை 120,000 (ஒரு இலட்சத்து இருபதாயிரம்)

(15833)

**076 733 6047**
**076 755 8606**


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல. 101, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org